# நெஞ்சம் கனிந்தது

மிலைக்கண்ணன்

1546

JPL
C1546

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8345

அன்பளிப்பு
28-6-71

திலகக்கண்ணன்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

KOHA JPL

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

KOHA JPL

15446 ZEY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் கனிந்தது

KOHA JPL
8345
பொது சன நூலகம்
இ.தே.கு. வே - 355
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.
KOHA JPL

திமிலைக்கண்ணன்

இராஜம் பிரசுரம்
திமிலைதீவு மட்டுநகர்
(இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு வைகாசி 1971

வெளியீடு - 4

(உரிமை ஆசிரியருக்கே)

894.8111
8345

விலை: ரூ. 1-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8345

# உள்ளே......

KOHA-JPL


1. கணேசா
2. முருகா
3. கலைமகளைத் துதிப்போம்
4. இன்னருள் செய்திடுவாள்
5. போற்றிப் பாமாலை
6. காத்தருள் பரம்பொருளே!
7. விண்ணப்பப் பத்து
8. தத்துவம்
9. ஒன்றும் வாழ்வு தருக
10. என்நிலை கண்டிரங்க லாகாதா
11. இறை அருள்
12. அன்பு மலராதோ
13. பேராளன் கண்ணன்
14. திருமாலை நாம் துதிப்போம்
15. கண்ணன் வருவானோ
16. கண்ணன் திருவருள்
17. நல்வினை தேக்கிடவே
18. இன்பம் பிறந்ததடி
19. பொய்யிருள் மாய்ந்தது
20. கண்ணனை வேண்டுதல்
21. நெஞ்சம் கனிந்தது
22. மாதவனைத் துதிப்போம்
23. சரசகோபாலா சரணம்


பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாமாலை

894.811

திருமாலின்

திருவடிகளுக்கு:-

| | |
|---|---|
| வகுப்பு எண். | |
| வரவு பதிவு எண் | |
| மட்டை கட்டிய திகதி | மட்டை கட்டிய திகதி |

**சமர்ப்பணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

(பண்டித, வித்துவான் வி. சீ. கந்தையா B.O.L.
அவர்கள் வழங்கியது)

JPL KOHAR

மட்டக்களப்புத் திமிலைதீவைச் சேர்ந்தவரும் 'திமிலைக் கண்ணன்' என்னும் புனைபெயரிலே எழுத்து உலகில் வாழ்பவருமான திருவாளர் சி. ஏரம்பமூர்த்தி அவர்களின் கவிதைப் படைப்பு 'நெஞ்சம்கனிந்தது' என்னும் இந்நூல். இதற்கு அணிந்துரை ஒன்று நல்கி இவரை ஊக்கப்படுத்துவதில் யான் பெரிதும் மகிழ்வு காணுகின்றேன்.

13469

மட்டுநகரின் தென்மேல் திசையிலே ஒதுக்குப் புறமாக அமைந்துள்ள ஒரு கிராமம் திமிலைதீவு. மட்டக்களப்புத் தமிழகத்தின் வரலாற்றுப் பின்னணியிலே பெரும் பங்கு கொண்டுள்ள பதி இது. இங்கே பழந்தமிழ்க் கலாச்சாரம் அனைத்துக்கும் காப்பாளர் போன்ற தமிழ்ப் பெருங்குடி மக்கள் சிலர் உள்ளனர். 'திமிலைத்துமிலன்' 'திமிலைமகாலிங்கம்' 'திமிலைக்கண்ணன்' என்ற புனை பெயர்களுள் மறைந்து கவிதையும், நாடகமும், ஓவியமும், சிறுகதையும் நாவல்களுமாகப் பலவற்றைத் தமிழ் கூறும் நல்லுலகத்துக்களிக்கும் யாவரும் உடன் பிறந்த சகோதரரே என்பது இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடத்தக்கதாகும்.

அவருள் இளையரான 'திமிலைக்கண்ணன்'தாம் யாத்துள்ள மிகப் பலவாகிய கவிதைகளுள் திமிலைக் கிராமத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பிரசித்திபெற்ற ஸ்ரீ மகாவிஷ்ணுவின் மீது அமைக்கப் பெற்ற பக்திப் பாடல் சிலவற்றை ஒருங்கு சேர்த்து இந்நூலாக வெளியிடுகிறார். அவர் அக்கோவிற் பூசகராகவும் இருக்கும் வாய்ப்பு அன்றாது கவிதைப் புலமைக்குப் பக்தி வளத்தை ஊட்டி வளர்க்கக் கால் செய்துள்ளது.

முறைப்படி கணேசன் துதி முதலாக முருகன், கலைமகள், திருமகள், யாவரையும் தொழுது பாடியபின்னரே கவிஞர் தமது நூலுள் இறங்குதல், புதுமைத்துடிப்புடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவராயினும், பழமையையும் போற்றும் இவரது பண்புடைமையையும் காட்டுவதாகும். அர்ச்சனை என்னும் 'போற்றிப்பாமாலை'யும் 'விண்ணப்பப்பத்தும்' "பொய்யிருள் மாய்ந்தது" என்ற பாடல்களும் இன்னுரது கவிதைச் சிறப்புக்குச் சான்ருக மிளிர்வன என்னலாம். நல்ல முயற்சி. இதுபோன்று இன்னும் பல நூல்களைக் காலத்துக்கேற்ற வகையில் படைத்துத் தமிழன்னைக்கு அணி செய்தற்கு வேண்டிய நல்லாதரவு அனைத்தையும், இந்த இளங்கவிஞருக்கு அளித்தல் வாசகர் அனைவரதும் கடனுகும். வாழ்க திமிலைக்கண்ணன், வளர்க இவரது கவிதைப் புகழ்.

வி. சீ. கந்தையா
6-5-71.

"கூடல்"
15, மெத்தை வீட்டுத் தெரு,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கவிஞன் சிருஷ்டிக்கப் படுபவனல்ல, அவன் கவிஞஞு கவே பிறக்கிறுன். அவனே ஒரு சிருஷ்டி கர்த்தா. கண் காணுதவர்களேயும் காதலிக்கச் செய்யும் அற்புத சக்தி யுடைய கவிதைகளே, எல்லாக் கவிஞர்களாலும் படைத் துத்தர முடியாது. அப்படியான அற்புத சக்தி வாய்ந்த கவிதைகளேயே எழுதி வருபவர்கள் ஒருசிலரே. அவர்களுள் ஒருவர்தான் கவிஞர் ''திமிலேக்கண்ணன்''. சக்தி வாய்ந்த அதிஅற்புதக்கவிதைகளே எழுதிவரும் இளேஞர் இவர்.

திமிலே இலக்கியப் பரம்பரைக்கு முன்னேடியான கவிஞர் ''திமிலேத்துமிலனின்'' சகோதரர் இவர். அண் ணுவின் அடிச்சுவட்டையே இவரும் பின்பற்றிக் கவிதை களே யாத்த போதும் சில இடங்களில் அவரின் கவிதை களேயே விஞ்சி விட்ட கவர்ச்சியோடும் கம்பீரத்தோடும் உயிர்த்துடிப்போடும் இளம்வனப்போடும் பொலிவன இவ ரது கவிதைகள். இலங்கை வானெலி இளேஞர் மன்றத் தில் ஒலிபரப்பான இவரது கவிதை எழில் எத்தனேயோ இளேஞர்களேயும் யுவதிகளேயும் துடிக்கவைத்ததுண்டு. ஈழத்தில் வெளியாகும் அத்தனே செய்தியேடுகளிலும் இவ ரது எழில் கொஞ்சும் கவிதைகள் இடம்பெற்றுக் கொண் டிருக்கின்றன.

உணர்ச்சித் துடிப்புக் கொப்பளிக்கும் இந்த இளேஞ ரின் உள்ளம் கண்ணன்பால் ஈர்க்கப்பட்டபோது பிறந்த கவிதைத் தேன்துளிகளேத் திரட்டி வாசகர்களுக்களிப்பதில் நாம் பெருமிதமடைகிறேம். ''இராஜம்'' பிரசுரத்தின் நான்காவது முயற்சியான இக்கவிதை நூலுக்கு வாசகர் காட்டும் வரவேற்பே வாழத்துடிக்கும் இந்த இளேஞருக்கு உற்சாகமூட்டுவதாகட்டும். கவிஞர்களின் முதுசொமான நல்குரவு இந்த இளேஞரையும் புடம் போடத் தவறவில்லே. ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை இவர் எதிர்நோக்கி முன்னேற, தமிழ் கூறும் நல்லுலகு உதவவேண்டுமெனப் பெரிதும் விழைகிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலுக்கு அணிந்துரை அணிந்து சிறப்பித்த பெருந்தகையாளர் பண்டிதர் வி. சீ. கந்தையா அவர்களுக்கும்; அறிமுகம் வரைந்ததோடு அச்சேறுதற்கான ஆலோசனைகளும் அவ்வப்போது பலவகை உதவிகளும் நல்கிய திரு "அன்புமணி" (இரா. நாகலிங்கம்) அவர்களுக்கும்; குறிப்பிட்ட நேரத்தில் அழகாக இதனை அச்சிட்டுதவிய கத்தோலிக்க அச்சகத்தாருக்கும் பெரிதும் நன்றியுடையோம்.

"இராஜம்" பிரசுரத்தின் வெளியீடுகளை எதிர்நோக்கி ஆதரவு நல்கிவரும் வாசகப் பெருமக்களுக்கு நாம் நன்றி கூறமாட்டோம், காரணம்; அவர்கள் தமிழன்னைக்குக் கடைப்பாடுடையவர்கள்; கை தூக்கிவிடுவார்கள்.

நிர்வாகி

இராஜம் பிரசுரம்
திமிலைதீவு,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் கனிந்தது

## கணேசா

மாங்கனியை விரும்பிச் — சிவனை
வல மாக வந்தவனே — உயர்
தேங்கனி ஒன்றெடுத்து — உடைத்துத்
திருவடி போற்றுதல்போல் — தமிழ்த்
தீங்கனிப் பாயாத்து — உனதருள்
சித்தத்தை வேண்டுகிறேன் — கணேசா;
ஈங்குமுன் நின்றருள்க — கவிமழை
இதயத்திலே பொழிக!

## முருகா!

சக்தி வடிவேலா — குமரா!
சங்கரன் பாலகனே — உயர்
சித்தஅறி வொளியே — அமரர்
சிறையினை மீட்டவனே — பக்தி
முற்றிக் கனிந்துகனிந் — துதிரும்
முத்தமிழ்ப் பாமலர்கள் — என்றன்
சித்தத்திலே மலர ...... முருகா
திருவருள் செய்திடுக!

## கலைமகளைத் துதிப்போம்

வெள்ளைக் கமலத்திலே — உறைந்திடும்
வித்தகியைத் துதிப்போம் — அவள்
தெள்ளுதமி ழருள்வாள் — கவிதைத்
தேனைச் சொரிந்திடுவாள் — அதை
அள்ளி யள்ளியருந்தி — அவள்புகழ்
பாடிநாம் அஞ்சலிப்போம் — நறுங்
கள்ளை நிகர்கவிதை — படைக்கக்
கலைமகளைத் துதிப்போம்!

KOHA JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னருள் செய்திடுவாள்

செங்கமலத் துறைவாள் — திருமால்
சித்தத்திலே அமர்வாள் — திரு
மங்களச் செல்வியினை — நினைந்து
மாதவனைத் துதித்து ...... — கவி
பொங்கிப் படைத்திடுவோம் — அன்னை
பொன்மலர்த் தாள்பணிவோம் — புவி
எங்கும் புகழ்பெறவே — நம்தாய்
இன்னருள் செய்திடுவாள்.

---

## போற்றிப் பாமாலை

(அர்ச்சனை)

அமுதமது பகிர்ந்தளித்த அமுதா போற்றி
ஆவினத்தின் பின்சென்ற ஆயா போற்றி
கமலமலர்ச் செங்கண்ணு போற்றி போற்றி
காசினியில் அசுரர்களைக் கொன்ற கண்ணு
உமதினிய அருள்நோக்கால் எம்மைக்காத்து;
உயர்செல்வ வாழ்வளிப்பாய்; உலகோர் போற்றத்
திமிலைநகர் உறைகின்ற தேவ தேவே
திருமாலே உன்பாதம் போற்றி போற்றி

மலையெடுத்துக் குடையாக்கும் மாயா போற்றி
மாவலியைக் கொன்றருள்ள வாமா போற்றி
கிலையெடுத்து வளைத்தசிறி ராமா போற்றி
சிறிரங்கா அரிரங்கா போற்றி போற்றி
கலகலென நகைசெய்து யாசோதைக் சிந்தக்
காசினியை வாய்க்குள்ளே காட்டும் கண்ணு
உலகமெலாம் உனைப்புகழத் திமிலைதீவில்
உறைகின்ற திருமாலே போற்றி போற்றி

கஞ்சனது வலிகெடுத்த கண்ணு பேரற்றி
காயாம்பூ நிறவண்ணு போற்றி போற்றி
அஞ்சாது பகைதடுத்த அரங்கா போற்றி
அசோதை முலைப்பாலுண்ட அழகா போற்றி

8345



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சமென உனைநித்தம் துதிப்போ ருள்ளத்
தாகத்தைத் தீர்த்தருளும் தயாளா! எங்கள்
மஞ்சுநிறை வயல்சூழ்ந்த திமிலைதீவில்
வந்தமர்ந்த திருமாலே போற்றி போற்றி!

விண்ணினது நிறமாகி நின்றாய் போற்றி
வேதாவை உந்தியிலே தந்தாய் போற்றி
பெண்ணாகி அரனோடு சேர்ந்தாய் போற்றி
பெரும்உலகை ஒருஅடியால் அளந்தாய் போற்றி
எண்ணாத எண்ணமெலாம் எண்ணியெண்ணி
இருகையும் சிரங்கூப்பி நிற்போர்க் கெல்லாம்
கண்ணுக்குக் கண்ணாகத் திமிலைதீவில்
காட்சிதரும் திருமாலே போற்றி போற்றி.

பூதங்கள் ஐந்தாகி நின்றாய் போற்றி
பூமகளைப் புணர்ந்த சிறிராமா போற்றி
வேதத்துட் பொருளாகி நின்றாய் போற்றி
வேண்டுவார் வேண்டியதை ஈவாய் போற்றி
கீதத்தால் உனைப்போற்றித் துதிப்போர்க் கெல்லாம்
கீதையெனக் கண்முன்னே வருவாய்; இந்த
பூதலத்தில் திமிலைநகர் உறையுமெங்கள்
புண்ணியனே உன்பாதம் போற்றி போற்றி!

தூணுக்குத் தூணாகி நின்றாய் போற்றி
துணிவோடு இரணியனைக் கொன்றாய் போற்றி
காணுகின்ற காட்சியெலாம் ஆனாய் போற்றி
கற்பனைக்கும் எட்டாது நின்றாய் போற்றி
வேணுமெனிற் கேட்டதெலாம் தருவா யென்றுன்
வீதிவலம் வந்துநின்று துதிப் போருள்ளம்
காணுகின்ற பொருளாகித் திமிலைதீவில்
காட்சிதரும் திருமாலே போற்றி போற்றி

ஐவருக்காய்த் தூதுசென்ற ஆயா போற்றி
அரவணையிற் பள்ளிகொள்ளும் அரங்கா போற்றி
தெய்வமே அபயமெனத் துதித்து நின்ற
திரௌபதிக்குத் துயில்தந்து காத்தாய் போற்றி
வையமிதைக் கடல்கொண்டு அழிக்கா வண்ணம்
வராகமெனத் தோன்றியருள் செய்தாய் போற்றி
கைகூப்பி யஞ்சலிக்கத் திமிலைதீவில்
கருணைதரும் திருமாலே போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மச்சமென வந்துதித்த மாயா போற்றி
மாதுஅக லிகைசாபம் தீர்த்தாய் போற்றி
பச்சைமா மலைமேனிப் பரனே போற்றி
பார்த்தனுக்குத் தேர்செலுத்தும் பாகா போற்றி
அச்சுதனே ஆயர்குலக் கோவே போற்றி
அடியார்கள் துயர்தீர்க்கும் அருளே போற்றி
இச்சகத்தோர் துதிசெய்யத் திமிலைதீவில்
இருந்தருளும் திருமாலே போற்றி போற்றி.

பூதகியின் முலையுண்ட புதல்வா போற்றி
பூவையர்கள் சிறைமீட்ட புனிதா போற்றி
மாதர்மனை வெண்ணைதயிர் வாரியுண்டு...
மாயங்கள் செய்தகோ பாலா போற்றி
காதலனுய்க் கன்னியரின் உளம் கவர்ந்து
கட்டுண்டு மருதுவிளச் செய்தாய் போற்றி
மாதவனே திமிலைநகர் உறையும் தேவே
மாயவனே உன்பாதம் போற்றி போற்றி!

கன்றெடுத்துக் கனிக்கெறிந்த கண்ணு போற்றி!
கானத்தில் உயர் வேணு கான லோலா
என்றென்றும் உன் சேவை செய்ய வைத்து
ஏழையெனைத் துயரத்தில் ஆழ்த்த லாமோ?
பொன்ருத புகழ்தந்து பொருளும்தந்து
புவிமெச்ச வாழ்வாங்கு வாழ்வு தந்து
இன்றென்னை ஆட்கொள்வாய் திமிலைதீவில்
இனிதுறையும் திருமாலே போற்றி போற்றி.

---

## காத்தருள் பரம்பொருளே

### பல்லவி

காத்தருள் பரம் பொருளே! — என்
கன்னித் தமிழ்க்குடிக்கு இன்னல் வராது நீ!
காத்தருள் ... ... ...

### அனு பல்லவி

பார்த்தனுக் கருள்செய்த பரமதயாளா!
பாரதப் போர்முடித்த பன்னகசயனு
காத்தருள் ... ... ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

அன்பும் அகிம்சையும் அருளும் பெருக
ஆற்றலும் துணிவும் கீர்த்தியு மோங்க
துன்பம் துயரம் தொல்லைகள் மறையத்
தூய தமிழ்க்குல வாழ்வு உயரக்
காத்கருள் ... ... ...

நீதி நிலைக்க நிறைகாத்து மாதரெனும்
சாதி உலகில் தனிப்பெருமை கொள்ளத்
தீது அகலத் தித்திக்கும் செந்தமிழை
ஓது வார்உள்ளம் உவந்து பெருமை கொள்ளக்
காத்தருள் ... ... ...

---

## விண்ணப்பப் பத்து

அன்புமலர் தனையெடுத்துன் பதத்தில்வைத்து
அஞ்சலித்தேன் திருமாலே; அடியேனுள்ளத்
துன்பமெலாம் அகற்றியாட் கொண்டென்நாளும்
துணைதந்து தூயவழி காட்டிப்பாரில்;
இன்பத்தை எனக்களிக்க ஏலாதோதான்?
இறையவனே மனமிரங்கி அருள்பாலிப்பாய்;
தென்பிழந்த குசேலருக்குத் திரு வளித்த
திருமாலே திமிலைநகர் உறையும் தேவே!

தேவாதி தேவனென வந்துதித்தாய்;
திக்கற்ற ஏழைகட்குத் திருவளித்தாய்
பாவாலே உனைத்துதித்த பாவலர்க்குப்
பரமபதம் தனையளித்தாய்; பாரில்என்றும்;
நாவாலே உனைப்போற்றித் துதிப்பவர்க்கு
நல்லதமி ழிசையளித்தாய்; நாயேன்முன்பு
தேவாநீ! காட்சிதர முடியாதோதான்
திருமாலே திமிலைநகர் உறையும் தேவே.

உறைவதற்கு நல்லதிருக் கோயிலுண்டா?
உன்புகழைப் பாடுதற்கு வார்த்தையுண்டா?
நிறைவாகப் பணிசெய்ய நிதிதானுண்டா?
நினைத்தபடி வாழ்பவற்கு நியதியுண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறைபடிந்த மனத்தோடு வாழுமென்னைக்
காப்பாற்றக் கரமுண்டா? கருணையுண்டா?
திறைசெலுத்திப் பணிபுரிய யார்தானுண்டு
திருமாலே திமிலைநகர் உறையும் தேவே.

திமிதிமென நடனமிடும் பத்தருண்டு
சிந்தித்துப் பணிசெய்யும் பக்தருண்டா?
அமுதத்தைப் பகிர்ந்தளிக்கும் கரமுமுண்டு
அன்பர்கட்கு அருள்செய்யும் திறமுமுண்டு
உமதினிய அருள்நோக்கால் உய்வோர்கோடி (நீ)
உறைகோயில் தனைத்திருத்த ஒருவரில்லை
தமதுநலன் கருதுபவர் மலிந்தாரிங்கு
திருமாலே திமிலைநகர் உறையும் தேவே.

ஓங்கிவளர் மணித்தூணும் சிகரத்தோடு
உனதுதலம் காட்சிதரக் காணவேண்டும்,
வீங்குமுலைத் திருமடவாள் அருகிருக்க
வீதிவலம் வரும் காட்சி பார்க்கவேண்டும்
ஏங்குகின்ற அடியாரின் துயரைத்தீர்த்து
எல்லோர்க்கும் நல்வாழ்வு அருளவேண்டும்.
தீங்ககலத் தருவரசின் கீழமர்ந்த
திருமாலே திமிலைநகர் உறையும் தேவே.

பெற்றெடுத்த தந்தையினை யிழந்தேனிந்தப்
பிறந்தமண்ணில் நிலைத்திருக்கும் நிலமிழந்தேன்.
சுற்றத்தார் இருந்துமில்லா நிலையதானேன்.
தொண்டுசெய்தும் கூலியற்ற தொண்டனானேன்.
கற்று ஒரு தொழில்செய்ய முடியாவாறுன்
கடமைசெய்து கதியற்றேன்; காப்பாற்றென்னை.
சிற்றறிவால் செய்பிழையைப் பொறுத்தாட்கொள்வாய்
திருமாலே திமிலைநகர் உறையும் தேவே.

அறிவறியாக் காலமுதல் ஆட்கொண்டென்னை
அன்புவைத்துக் காப்பவனே அருகே வா வா!
நெறிதவறு ஐவருக்காய்த் தூதுசென்ற
நெடுமாலே என் நினைவில் இருக்க வா வா
வெறிபிடித்த கஞ்சனுயிர் தனைவதைத்த
வீராஎன் வாக்கிலொளி விளங்க வா வா
சிறிவாசு தேவா தீ வினையகற்றும்
திருமாலே திமிலைநகர் உறையும் தேவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையைப்போல் தந்தையைப்போல் மனைவியைப்போல்
அன்புவைத்துக் காப்பவனே அருளைத்தாதா?
என்ன இடர் வந்தாலும் தடுத்தாட்கொண்டு
என்பிணியைத் தீர்த்தென்றும் இன்பம் தாதா!
வன்மத்தை மனத்திருத்தி வருத்துவோர்தம்
வஞ்சனையைப் போக்கியருள் வலிமைதாதா
சின்னமதி எனைப்பிடித்து ஆட்டாதாள்வாய்
திருமாலே திமிலைநகர் உறையும் தேவே.

உள்ளத்தில் ஒளிதோன்ற அன்பு வேண்டும்
உலகத்தில் அழிவற்ற புகழும் வேண்டும்;
கள்ளத்தை அறியாநல் மனமும் வேண்டும்;
கசடற்ற தெய்வீகப் பண்பு வேண்டும்
வெள்ளம்போல் கவிகோடி பெருக வேண்டும்
வினைதீர உனைப்பாடி ஆடவேண்டும்;
தெள்ளுதமி ழிசைபோல எனிற்கலந்த
திருமாலே திமிலைநகர் உறையும் தேவே.

உய்வதற்கு உன்னருளே வேண்டுமையா
உணர்வதற்கு உன்நினைவே வேண்டும் கண்ணு
நெய்போலப் பாலினுள்ளே கலந்திருக்கும்
நெடுமாலே என்னுள்ளே நிறைந்திருப்பாய்;
வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு
வரமளித்து உயிர்காப்பாய் வலிமைகுன்றுத்
தெய்வமே! திமிலைநகர் உறையும் தேவே
திருமாலே உன்பாதம் போற்றி போற்றி.

---

## தத்துவம்

தீபநாளிலே தீப மீட்டுநாம்
திருமால் பாதமே போற்றுவோம் — கொடும்
பாபத்தீவினை யாமிருள் கெடப்
பண்பினுல் உயர் வெய்துவோம்.

மெய்யொளி யினுல் வையகத்திலே
மேன்மையாம்நிலை காணுவோம் — உயர்
தெய்வநன் நெறித் தவக்கனலினுல்
சாவையும் நாம் வெல்லுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமாத்மா வுடன் ஐக்கியம்பெறப்
பக்தியாம்கனல் மூட்டுவோம் — கொடும்
நரக ஞகிய உட்பகைகளை
நாமுடன் துணிந் தோட்டுவோம்.

மும்மலத் துளே முதன்மையானதை
முதலிலே அடித் தோட்டுவோம் — இனி
நம்மைநாம் அறிந் தநீதியாகிய
நரகனை வதை செய்குவோம்.

எம்முளே கொடும் அசுரன்வாழ்வதை
இனியும் நாம் பொறுத் துய்வமோ? — அட
நம்துணையெனும் சக்தி கண்டவன்
நடுங்கவே சிரம் கொய்யுவோம்.

தீப ஆவளித் தெய்வ நாள்தரும்
சீர்பொலிந்துயர் தத்துவம் இதைத்
தீப நாளிலே நாம் உணர்ந்தினித்
திருமால் பாதமே போற்றுவோம்.

---

## ஒன்றும் வாழ்வு தருக

அஞ்சி யஞ்சி மனம்
துஞ்சி டாது அரு
ளாற்றல் தந்த வரதா! — இளம்
பிஞ்சு நாளி லுனைத்
தஞ்ச மென்ற எனைப்
பெரிது மாண்ட முதல்வா!

தொண்டு செய்து உனை
அண்டி வாழும் எனைத்
துயரில் ஆழ்த்தல் முறையோ? — மலர்
கொண்டு சாற்றும் சிறு
தொண்டன் உன்ற னெதிர்
கோழை யாதல் அழகோ?

வந்து வந்து அருள்
தந்து தந்து எனை
வாழ வைக்க விலையேல் — உளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொந்து நொந்து நிதம்
வெந்து வெந்து கொடும்
நோயில் வாடல் முறையோ?

இன்று நின்று எழில்
ஒன்று காட்டி மிகும்
இன்னல் தீர்க்க வருக — உயிர்
ஒன்றும் ஒன்று மென
ஒன்றி நின்ற திரு
ஒன்றும் மார்ப வருக!

தருக தருக அருள்
தருக பத்ம பதம்
தலைமேல் வைத்து அருள்க — உளம்
உருக உருக கண்ணீர்
பெருகப் பெருக உன்னோ
டொன்றும் வாழ்வு தருக.

---

## என்னிலை கண்டிரங்க லாகாதா?

**பல்லவி**

என்னிலை கண்டிரங்க லாகாதா? — கண்ணா
ஏழையென் துயர்தீர்க்க வா! வா! வா!

**அனு பல்லவி**

அன்னையும் தந்தையும் அருட்குருவும் நீயே
ஆயனே! மாயனே ஆதரித்தருள் தாதா

**சரணங்கள்**

உன்னையலால் துணை ஒருவரு மில்லையையா!
உலகமெலாம் அளந்த உயர்நெடு மாலையா
இன்னலெலாம் தீர்த்து இகபர சுகம்தாதா!
இனியவனே யானைக் கருள்செய்த கண்ணையா.
என்னிலை ... ... ...

சிந்தனைக் கெட்டாத தெய்வமறைப் பொருளே
தெய்வகுஞ் சரிவள்ளி தனையருளும் பரனே
நந்தனே நாரத கான வினோதனே
நாராயணனே நல்லருள் தரும் கண்ணா
என்னிலை ... ... ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணை யிழந்தவர்க்கோர் கண்ணான கண்ணா
கருமுகிலை யொத்த நிறமான கார்வண்ணா
மண்ணை யள்ளியுண்ட மாயவனே' திமிலை
மாநகர் உறைகின்ற மாதவா! யாதவனே
என்னிலை ... ... ...

அருளால் வரும்துயரை அனுபவித் தனுபவித்து
ஆற்றா தழுமென்னைத் தேற்றாதிருப் பதுமேன்?
பொருளில்லைப் பொன்னில்லைப் புவிமெச்சும் வாழ்வில்லை.
பொறிகளால் துன்புற்று நெறிகெட்டேன் இன்னும் நீ.
என்னிலை ... ... ...

---

## இறை யருள்

எங்கும் நிறைந்த பரம்பொருளை என்
இதயத்தில் காணுகின்றேன் — புவி
எங்கும் உயிர்க்குயி ரான இறைவனை; என்
உயிரென்றே எண்ணுகின்றேன்.

ஐம்பெரும் பூதத்தா லானவன் நானென்
றறிந்து உணர்ந்து கொண்டேன் — அந்த
ஐம்பெரும் பூதமும் நானென் றுணர்த்துவோன்
ஆண்டவன் என்று கண்டேன்.

தெய்வீகப் பண்பெனும் பண்புகள் என்னைத்
தேடிவருதல் கண்டேன் — அந்த
தெய்வம் நற்பண்புரு வாகிமிளி ர்வதைத்
தெரிந்து தெளிவடை ந்தேன்.

இயற்கையாய் எங்கும் இலங்கும் இறைவனை
இயற்கை எழிலிற் கண்டேன் — இந்த
இயற்கையை வெல்லத் துடிக்கும் விஞ்ஞானத்தின்
ஏற்றத்தைக் காணுகி ன்றேன்.

இயற்கை விளைவு தரும் கனிவர்க்க
இயக்க வலிமை கண்டேன் — அற்ப
செயற்கை விளைவு கண்டா ணவங்கொள்வோர்
செருக்குற் றழிவ துண்மை.
...

8345

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணைக் கடந்துவிண் மதியைப் பிடித்ததும்
மனித வலிமை யன்றோ! — இம்
மண்ணிற் பிறந்த மனிதர்க்கு ஞான
மதியைப் படைத்தவன் யார்?

மண்ணையோர் கட்டில் நிறுத்தி யியக்க
வைத்து மகிழ்பவன் யார்? — நீள்
விண்ணினிற் கோள்களை வைத்து வியக்கும்
விந்தை புரிபவன் யார்?

கண்ணை ஒளியைக் கலையினைக் காட்டிக்
கற்பிக்க வைத்தவன் யார்? — ஓர்
பெண்ணையும் ஆணையும் வைத்தோர் மரபைப்
பெருப்பித்த வித்தகன் யார்?

எண்ணி லடங்கா உயிர்க்குல மெல்லாம்
இங்கு படைத்தவன் யார்? — அவை
உண்ணும் உணவு நிதம் விளைவாக
உதவி புரிபவன் யார்?

எண்ணித் தெளிந்து உணர்ந்திங்கு பார்த்தால்
எல்லாம் இறையருளே — இதைக்
கண்ணுற் கருத்தால் மனத்தால் அறிந்து
கடவுளை நீதுதி செய்.

---

## அன்பு மலராதோ?

அன்பு மலராதோ? — அரு
ளாற்றல் பெருகாதோ?
இன்பம் சுரக்காதோ? — என்றன்
இதயம் மகிழாதோ?

துன்பச் சுனையினிலே — நான்
துடிதுடித் தேங்குவதோ?
என்பால் மனமிரங்கிக் — கண்ணு
இன்னருள் தாராயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளொளி தோன்றுதோ — பக்தி
ஓங்கி வளராதோ?
கள்ளப் புலன்களெலாம் — அன்புக்
கயிற்றுக் கடங்காதோ?

உள்ளம் உருகாதோ? — கண்ணு
உன்னருள் தோன்றுதோ?
கள்ளம் அகலாதோ — பக்திக்
கண்ணீர் பெருகாதோ?

வாழ்வு உயராதோ — என்
வாக்குப் பலிக்காதோ
தாழ்வு நிலையகலக் — கண்ணு
சஞ்சலம் போக்காயோ!

நாள்தோறும் உன்நினைவால் — உள்ளம்
நல்லருள் சேர்க்காதோ?
வாழ்வாங்கு வாழ்வதற்கே — கண்ணு
வல்லமை தாராயோ?

கங்குல் அகலா தோ — ஒளிக்
கதிர்வந்து தோன்றுதோ?
மங்கையர் மையலினல் — மனஒளி
மங்கி மறைந்திடுமோ?

திங்கட் திருமுகத்துத் — திருமால்
தீவினை தீர்க்கா யோ?
எங்குனைத் தேடுவது? — இறைவா
என்னையாட் கொள்ளாயோ?

---

## பேராளன் கண்ணன்

அதர்மந் தலைவிரித் தாடிடும் வேளையில்
அஞ்சே லென அருள்வான் — எங்கட்
காபத்து வேளையில் காவல் புரிபவன்
ஆயர் குலத் துதித்தோன்.

மண்ணிலும் விண்ணிலும் மாரியுங் கோடையு
மாக விளங் கிடுவான் — இந்த
மானிலத்தி லொரு மானைத் துரத்திப்பின்
மாரிச ஞுக் கிடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணெயும் நெய்யும் திருடியுண் பான்பெரும்
வேடிக்கை செய் திடுவான் — இளம்
வேலவனுக் கிரு கன்னிய ரீந்துபின்
வேடிக்கை பார்த் திடுவான்,

கன்னியர் பின்னே திரிந்திடு வானவர்
காதல ளுகிடு வான் — இந்தக்
காதலை நன்குண ராத கயவரின்
கண்ணுக் கிரு ளாவான்.

பூவினி லைம்பெரும் பூதங்க ளாகியிப்
பூ மகளைப் புணர்வான் — உந்திப்
பூவினில் நான்முகனை யுருவாக் கியிப்
பூத லத்தைப் படைப்பான்.

தட்டித் தடவித் திரியுங் குருடற்குத்
தாளெரு பொல் லாவான்— நம்முள்
முட்டித் ததும்பி முளைத்தெழும் சோதியாய்
முக்தி நிலை பகர்வான்.

வெட்ட வெளியில் பரந்தபரம் பொருளாக
விளங் கிடு வான் — உளக்
கொட்டிலி லன்புக் கயிற்றுக் கிணைபவன்
கோபி யர்காந் தனவன்.

சாவினின் போதவன் பாதம் பிடித்திடில்
சாலோ கமுந் தருவான் — இந்தச்
சாவினை வேண்டும் நரகனின் வாழ்வொளி
சாகா வகை புரிவான்.

ஏழைகளைக் கண்டு எள்ளிநகை செயும்
ஈனர் களைக் கடிவான் — அன்று
ஏழ்மையில் வாடிமுன் வந்த குசேலரை
இறுகத் தழுவி யவன்.

தானம் பெறுங்குன ளுகவந்து ஒரு
தாளில் உல களப்பான் — அவ
தானமும் நேர்மைத் துணிவும் விவேகமும்
தானு ள்ளதூத னிவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதப் போரிலே தூதுசென்று பூமிப்
பாரத்தை ப்போக் கிடுவான் — இந்தப்
பாரளந் தோன்பதம் பற்றிப் பிடித்திடப்
பாவ வினை யகலும்.

தீராத தீவினை தீர்ந்துவிடும் நன்கு
சித்தம் தெளிந்து விடும் — இந்தப்
பேராளன் . கண்ணனின் பேர்சொல்லு முன்துயர்
பேதலித் தேகி விடும்.

---

## திருமாலை நாம் துதிப்போம்

உள்ளத்தில் உண்மை ஒளிமிகின் வாய்மை
ஓங்கி யுயர்வு தரும்.
பள்ளத்தில் வீழ்ந்து பரிதவிப் போர்க்கது
பாதையைக் காட்டி விடும்.
தெள்ளத் தெளிந்த அறிவால் அமைதியைத்
தேடிப் பிடித்து விட்டால்;
கள்ளப் புலன்கள் தரும் கவலைப்பிணி
கனவென மாறி விடும்,

நல்ல மனித மரபை வளர்த்துநாம்
நலம் பெறலா முலகில்.
செல்லாத காசெனச் சான்றோரைத் தூற்றும்
சிறு மதியை யொழிப்போம்.
வல்ல அரக்கனைக் கொன்று அமைதியை
வாழ வைத்த தினமாம்;
நல்ல ஒளித்திரு நாள்தரும் தத்துவம்
நமக்கோர் படிப்பினை தான்.

தீப ஒளித்திரு நாளில் மகிழ்ச்சி
சேரக் குதுக லிப்போம்;
பாபப் பெரும்பிணி கெட்டு அழியநற்
பண்பை வளர்த் திடுவோம்.
தீப ஒளிபோல் நம்முள்ளம் ஒழிபெற
சிந்தனை செய் துயர்வோம்.
தூப தீபம்மலர் இட்டுக் கண்ணனெனும்
தூயவனைத் துதிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்மை யரக்கனை மாய்த்துப் புதுமைப்
பொலிவோ டுயர் வுறுவோம்;
தெய்வமொன் றுண்டென நம்பி யுலகிலே
தீமைகளை யொழிப் போம்;
வைதெமைத் தூற்றி வாழ்வைக் கெடுத்திடும்
வஞ்சகர் நாணி வெட்கத்
தெய்வம் துணையென் றினியவை செய்வோம்.
திருமாலை நாம் துதிப்போம்.

---

## கண்ணன் வருவானோ?

சக்தி சிவனாகினான் — கண்ணன்
தாரக மந்திரம் தானாகினான்;
சுத்த அறிவாகினான் — கண்ணன்
துன்பம் துடைக்கும் மருந்தாகினான்

வித்தை பலகாட்டினான் — கண்ணன்
வீம்பை யழிக்கும் அரியாகினான்
புத்தகுரு வாகினான் — கண்ணன்
புகழின் வடிவமே தானாகினான்.

கருணைக் கடலாகினான் — கண்ணன்
காதல் ரதியின் மதனாகினான்'
தருணம் உணர்ந்துவந்து — கீதை
தந்து அறம் ஓதினான்

இருளில் ஒளியாகினான் — கண்ணன்
இன்பத் திரு வாகினான்.
அருளால் துயரோட்டினான் — கண்ணன்
அநீதி தனை யோட்டினான்.

வானின் நிறமாயினான் — கண்ணன்
வருமுன் உணர்ந் தோதினான்·
தேனின் சுவையாகினான் — கண்ணன்
தெவிட்டாத பாலா கினான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனில் உயிரா கினுன் — என்றன்
உயிருள் உயி ராகினுன்.
காணக் கண் தேடுதடி — கண்ணன்
காதல் மறந் தானேடி.

கண்ணை மறைத் தானேடி — கண்ணன்
கருணை மறந் தானேடி?
எண்ணம் உரைப்ப தற்குக் — கண்ணன்
இங்கு வருவானேடி?

---

## கண்ணன் திருவருள்

### பல்லவி

கண்ணன் திருவருளை எண்ணியெண்ணியிருந்தேன்
காலம் கடந் தேகுதே — தோழி

### அனுபல்லவி

வெண்ணை யள்ளியுண்ட வேணு கோபாலனை
வேண்டி நிதம்துதித்து நீண்டபொழுதிருந்து
கண்ணன் ... ... ...

### சரணங்கள்

மண்ணில் பிறந்துழன்று மனதைப் பறிகொடுத்து
எண்ண மெல்லாம் அவன்பால் ஏகத் தவிக் கின்றேன்
கண்ணன் வருவானே கவலையைத் தீர்ப்பானே
எண்ணம் விளலாமோ? ஏதுசெய்வேன் தோழி!
கண்ணன் ... ... ...

சொன்ன சொல்லைமறந்தான் சோகநிலை யழித்தான்
என்னை அவன்மறந்தான் ஏங்கித் தவிக்கவிட்டான்
புன்னகை யாலுலகில் போதையை யூட்டியவன்
என்ன செய்ய நினைந்தான்: ஏது செய்வேன்தோழி!
கண்ணன் ... ... ...

நந்த கோபாலா நாராயணு முராரி
தந்தாள் உனதருளை தயாளா உனைத்துதித்தேன்
சிந்தையிற் களிப்பூட்டி தேவாதி தேவனேயென்
நிந்தையைத் தீர்த்தருள நீதான் நினையாயோ?
கண்ணன் ... ... ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்வினை தேக்கிடவே

கண்ணன் அருள்பெறவே — அவனிரு
காலைப் பிடித்திடுவோம்,
எண்ணம் நிறைவுறவே — நமக்குறு
இன்னல் களைந்திடவே.

மாயன் அருள் பெறவே — அவனைநாம்
மன்ருடியே துதிப்போம்.
தூயநிலை பெறவே — நமதுளத்
துன்பம் அகன்றிடவே.

அன்பு விரிவுறவே — நமதுள
ஆற்றல் பெருகிடவே;
துன்பம் தொலைத்திடவே — கண்ணனைத்
தோத்திரம் செய்திடுவோம்.

பக்தி பெருகிடவே — நமதுளப்
பண்பு விரிவுறவே;
முக்தி நிலைபெறவே — கண்ணனெனும்
மூர்த்தியை நாம்துதிப்போம்.

பாற்கடலில் துயில்வோன் — அவனிரு
பாதமலர் தொழுவோம்.
நாற் கவி யாத்திடவே — நமதுளம்
நன்கு பழுத்திடவே.

பாம்பில் நடமிடுவோன் — திருமால்
பாதத்தைப் போற்றிசெய்வோம்.
நாம்துயர் நீக்கிடவே — நிதநிதம்
நல்வினை தேக்கிடவே.

---

## இன்பம் பிறந்தடி

உள்ளக் கமலத்திலே — கண்ணன்
ஒன்றியிருக்கும் நிலையினைக் கண்டுஎன்
உள்ளம் உருகுதடி!

பிள்ளை சிறுமனத்தான் — அவன்
பேச்சும் செயலும்மனத்தில் நிறைந்து என்
பெண்மையைக் கொள்ளுதடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்கையை மூட்டுதடி — கண்ணன்
வீரச்செயலும் விழிகளும் பார்வையும்
வேட்கையை மூட்டுதடி!

ஆட்கொள்ள வந்தானடி — எந்தன்
ஆவியிலொன்றி அழகுத் திரு மகன்
ஆட்கொள்ள வந்தானடி!

பேச்சுமொழி யிழந்தேன் — எந்தன்
பெண்மையை முற்றும் அவன் கையில் தந்துநான்
பேச்சுமொழி யிழந்தேன்'

கூச்சம் எழுந்ததடி — கண்ணன்
கொவ்வைச் செவ்வாயால் அமுதம்பருகையில்
கூச்சம் எழுந்ததடி!

சின்ன வயதுமுதல் — என்னைத்
தேடிவரும் கண்ணன் கூடி விட்டானின்று
தெய்வீக இன்பமுற்றேன்.

என்னை மறந்திருந்தேன் — அவன்
இன்னுயிர் என்னுயிரோடு கலந்தது
இன்பம் பிறந்ததடி!

---

## பொய்யிருள் மாய்ந்தது

அண்டங் கிடுகிடுத் தாடியசைந்திட
அர்ப்பரித்தான் நரகன் — இந்த
மண்டல மெங்கும் செழிக்கமழைதரு
மாமுகிலைப் புடைத்தான் — தேவ
அண்டர்கோன் இந்திரன், வெண்குடைசெங்கோல்
அபகரித்த செருக்கால் — அதிதி
குண்டலந் தன்னை அறுத்தெடுத்தான்; செவி
குருதியைக் கொட்டியது.

மூவுலகும் தொழு தேற்றும் பிரமனும்
மூச்சுற்று மெய்நடுங்க — அந்தத்
தேவுலகத் தறம் வீழ்ந்த தெனில், நாம்
செப்புவதேன் கொடுமை — இனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவுலகத்து அறம்நிலை கொள்ளுமா?
மூண்டதடா! பெரும் பேர் — செஞ்சொல்
நாவுதோறும் நடஞ் செய்பவள் நாயகன்
நல்லுணர்வுற் றெழுந்தான்.

சாரங்கம் நாந்தகம் சக்கரம் ஆழியோன்
தாங்கிச்சமர் தொடுத்தான் — அன்னை
ஓரங்கமாக இருந்து தேரோட்டினுள்
உலகம் வியந்ததடா! — ''தன்னுள்
ஆறங்க மாகிய உட்பகை மாய்த்ததோ!
ஆணவம் தீர்ந்ததுவோ'' — இந்தப்
பாரெங்குமே இருள் மாண்டிய வேளையில்
பஞ்சாயுதன் மொழிந்தான்.

''எண்ணி ரெண்டாயிரங் கன்னியரையிங்கு
ஏனோசிறையி லிட்டாய்? — இந்த
மண்மகள் பெற்றதனாலோ உனக்கிந்த
மண்டைக் கெருவமடா?'' — நரன்
கண்முனே கண்ணனை நோக்கிடினும்; தலைக்
கர்வம் அடங்கவில்லை — அவன்
உண்மை நிலையறியாத இருட்குகை
உள்ளொளி கண்டதில்லை.

அன்னையைத் தந்தையை ஆண்டவனைஅவன்
அதர்மம் அறிந்ததில்லை — இந்தப்
பொன்மகள் தந்த புயவலிமையவன்
பொய்யுட லென்றறியான் — இந்தச்
சின்னக் குணமுடை யானின்மனவிருள்
சீறியெழுந்ததடா! — புவி
அன்னை எழுந்ததை மாய்த்துவிட்டாள் — அரி
ஆழியை ஏவிவிட்டான்.

அல்லவை செய்த அரக்கன் ஒழிந்தனன்
ஆணவம் மாய்ந்ததடா! — இனிச்
சொல்லவும் வேண்டுமா அன்னை கண்ணீர்த்துளி
சொட்டியது அவன்மேல் — ''இந்தப்
பொல்லாத பிள்ளை மடிந்து விட்டான்பாமா
பொய்யுடல் மாய்கையிலே — அவன்
நல்லொளிகண்டனன் நாமும் தீபாவளி
நாடெங்கும் ஏற்றிவைப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆன்மவிடுதலை வேண்டிடும் ஜீவர்க்கு
ஆதரவை யளிப்போம் – நரர்
தீமையொழிந் தெமை நாடிடும் வேளையில்
தேறுதலும் உரைப்போம் – நல்ல
வாய்மைக்குலம்தழைத் தோங்கி ஒளிவிட
வல்லமை நீஅளிப்பாய் – உள்ளத்
தூய்மையாய்த் தீபாவளி யொளிபோற்றுவோர்
தூய்மை பெறுவரன்றோ!''

கண்ண னுரைத்ததைக் கேட்டபுவிமகள்
காதலினுல் தொழுதாள் – ''இந்த
மண்ணில் உயிர்க்குல மத்தனையும் என்
மக்க''ளென்றே அழுதாள் – இரு
கண்ணீர்த் துளியைத் துடைத்துவிட்டான் கண்ணன்
கங்குல் வெளுத்ததடா! – இந்தப்
புண்ணிய பூமியில் புத்தொளிப் பண்டிகை
பொய்யிருள் மாய்த்ததடா!

---

## கண்ணனை வேண்டுதல்

இளகிய உள்ளம் வேண்டும்
இனியநற் பண்பு வேண்டும்
அழகிய இளமை வேண்டும்
ஆற்றலும் அறிவும் வேண்டும்.
உளமகிழ் வென்றும் வேண்டும்
உறுதியும் தெளிவும் வேண்டும்.
மழலைபோல் இனிய செஞ்சொல்
மாது நல்லாளும் வேண்டும்.

வாழ்வாங்கு வாழ வேண்டும்
வறுமையை ஒழிக்க வேண்டும்
தாழ்வெலாம் அகற்ற வேண்டும்
சஞ்சலம் தீர்க்க வேண்டும்
ஊழ்வினை எதிர்த்த போதும்;
உண்மையே உரைக்க வேண்டும்
பாழ்வினை நீக்க வேண்டும்
பண்பினுல் உயர வேண்டும்

8345



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோனாய் வாழ... வேண்டும்
தத்துவம் உரைக்க வேண்டும்
ஈன்றவள் பெருமை கொள்ள
இல்லறம் நடத்த வேண்டும்
தோன்றினால் புகழ் நிலைக்கத்
தோன்றுதல் வேண்டும் கண்ணா
வான்புகழ் வள்ளுவன் போல்;
வாழ்ந்து நான்காட்ட வேண்டும்.

அன்பினால் உயிர்க் குலத்தை
அணைத்து நான்வாழ வேண்டும்.
துன்பத்தைக் களைய வேண்டும்
தூய்மையை க்காக்க வேண்டும்
புன்சொல்லை த்தவிர்க்க வேண்டும்
பொய்மையை அகற்ற வேண்டும்
இன்சொல்லே உரைக்க வேண்டும்
இறைவனே! அருள்தா! கண்ணா!!

---

## நெஞ்சம் கனிந்தது

அன்பு மலர்ந்ததடா! — அரு
ளாற்றல் பிறந்ததடா!
துன்பம் அகன்றதடா — உளத்
தூய்மை மிளிர்ந்ததடா!

உண்மை உயர்ந்ததடா — உளத்
துள்ளொளி வந்ததடா!
அண்மையில் வந்து நின்றான் — கண்ணன்
ஆவியில் ஒன்றிவிட்டான்.

என்னையே நானிழந்தேன் — அவன்
இதயத்திலே நிறைந்தான்
அன்னை மனமகிழத் — திருமால்
அடிவருடிக் கிடந்தேன்.

என்னையாட் கொண்டுவிட்டான் — என
தென்பதை மாய்த்துவிட்டான்;
சின்னப் பராயமுதல் — கண்ணன்
சேவையென் சேவையன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளால் துயரளித்தான் — கவி
ஆற்றலை ஊக்கிவிட்டான்;
பொருளைப் பறித்துவிட்டான் — பக்திப்
பொய்கையில் வீழ்த்திவிட்டான்.

மூழ்கி எழுந்துவிட்டேன் — அதனுள்
முக்க ளிக்கத் தெரிந்தேன்;
ஆள்கிறான் ஆளுடையான் — நம்மை
ஆட்டு விப்போனவனே

அவனருட் தாள்களிலே — கவி
தாஞ்சலி செய்துநின்றேன்;
சிவனவ னென்றுணர்ந்தேன் — திருமால்
திருவருள் நோக்காலென் —

நெஞ்சம் கனிந்ததடா! — கவிமழை
நினைவில் பொழிந்ததடா!
கொஞ்சு மொழிக் குமரன் — கோகுலக்
கோனருள் பூத்ததடா!

---

## மாதவனைத் துதிப்போம்

நெஞ்சக் கனகல் கொஞ்சம் உருகஎன்
நினைவில் நடமிடுவான் — கவி
புனைய வரம் தருவான்

பிஞ்சுப் பருவத்தில் தஞ்சம் அளித்துஎன்
பேதமை போக்கியவன் — அருட்
சாதனை ஆக்கியவன்

கண்ணன் கருநீல வண்ணன் அவனிரு
காலைப் பிடித்திடுவோம் — கீதை
நூலைப் படித்திடுவோம்.

வெண்ணெ தயிரள்ளி உண்ணும் குறும்பனை
வேண்டுதல் செய்திடுவோம் — துயர்
மாண்டிட உய்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பைப் பெருக்கிநாம் இன்பம் பெறநிதம்
ஆயனைப் போற்றி செய்வோம் — எங்கள்
மாயனைப் போற்றி செய்வோம்.

துன்பம் துயர்பிணி இன்றிநாம் வாழ்ந்திடத்
தோத்திரம் செய்திடுவோம் — கண்ணனை
ஏத்திநாம் போற்றிசெய்வோம்.

செங்க மலத்திரு தங்கிடு மார்பனின்
சேவையே செய்திடுவோம் — தமிழ்ப்
பாமழை பெய்திடுவோம்.

மங்கள சூரியன் எங்கும் ஒளிதர
மாதவனைத் துதிப்போம் — நாம்
யாதவனைத் துதிப்போம்.

---

## சரசகோபாலா சரணம்

கண்ணன் திருவடி சரணம் சரணம்
கலியுக வரதா சரணம் சரணம்
புண்ணிய புருஷா சரணம் சரணம்
புருசோத் துமனே சரணம் சரணம்
மண்மகள் கணவா சரணம் சரணம்
மாயா ஆயா சரணம் சரணம்
வெண்ணை யுண்டோய் சரணம் சரணம்
வேணுகோ பாலா சரணம் சரணம்

பாண்டவ தூதர் சரணம் சரணம்
பரிபூ ரணனே சரணம் சரணம்
ஆண்டவா அரிஹரி சரணம் சரணம்
ஆதவா மாதாவா சரணம் சரணம்
நீண்டவா ராமா சரணம் சரணம்
நேமி நாதா சரணம் சரணம்
பாண்டு ரங்கா சரணம் சரணம்
பரம தயாளா சரணம் சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னக சயனு சரணம் சரணம்
பரம த்யாபர சரணம் சரணம்
மன்னே மணியே சரணம் சரணம்
மச்சவ தாரா சரணம் சரணம்
அன்னே அரசே சரணம் சரணம்
அருளா ரமுதே சரணம் சரணம்
என்னு ளொளியே சரணம் சரணம்
இரணிய காலா சரணம் சரணம்

பரசு ராமா சரணம் சரணம்
பாரளந் தவனே சரணம் சரணம்
நரஹரி ஸ்ரீஹரி சரணம் சரணம்
நாரா யணனே சரணம் சரணம்
முரஹரி முரளீ சரணம் சரணம்
மூர்த்தியே முதல்வா சரணம் சரணம்
சரச கோபாலா சரணம் சரணம்
சதுர்புஜ விநோதா சரணம் சரணம்

KOHA-JPL
8345
15466 cc
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8345

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

K.V.
23.6.88

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திமிலைக்கண்ணன்

பெண்ணையும், காதலையும் பாடியே கவிஞர்களாக அறிமுகமானவர் பலர். இவர்கள் மத்தியில் இறையருள் பற்றிப்பாடி கவிஞரானவர் இந்த இளைஞர். இன்றைய இளைஞர்களின் உல்லாசப் போக்குக்கு நேர்மாருன உளம் கொண்ட இக்கவிஞர் அன்பு, அமைதி, அடக்கம், முதலிய நற்பண்புகளைப் பெற்றிருப்பதன் காரணத்தாலேயே தூய்மையான ஒரு கவிதையுள்ளத்தையும் பெற்றிருக்கிருர். திமிலை சகோதரர்களுக்குப் பொதுவானது இப்பண்பு.

திமிலை சகோதரர்களில் இளையவர் திமிலைக்கண்ணன். இவர் கவிதைகள் பெரும்பாலும் ஆத்மீகத்துறையையே கருப்பொருளாகக் கொண்டவை. 'ஆத்மஜோதி' 'விவேகி' 'மலர்' முதலிய சஞ்சிகைகளிலும் மற்றும் ஈழத்தில் பிரபலமாக உள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் இவரது கவிதைகள் வெளிவந்திருக்கின்றன. ஏராளமான கவிதைத் தொகுதிகளை வெளியிடும் அளவுக்கு கவிதைகளை எழுதிக் குவித்துள்ள இக்கவிஞரின் முதல்நூல் ''நெஞ்சம் கனிந்தது.'' ஒரு லட்சியத்தின் நிமித்தம் இந்நூல் வெளிவருவத... கவிஞரின் பன்முகப்பட்ட ஆற்றலை வெளிப்படுத்தும் ஒரு அறிமுக நூலாக இது அமையவில்லை. கவிஞ...ன் அடுத்த வெளியீடு அவ்வாறு அமையும் என எதிர்பார்க்கலாம்.

ஈழத்து இலக்கிய முயற்சிகளுக்குக் கைகொடுத்துதவவேண்டிய கடமைப்பாடு இந்நாட்டு இலக்கிய ...ர்களைச் சார்ந்துள்ளது. அவர்கள் தம் கடமை... செய்யவேண்டும்.

—அ...ணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.